# இலங்கையில் நிர்வாகப் பரவலாக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் : திருக்கோவில் பிரதேச சபை ஓர் விமர்சன ஆய்வு


பெயர் : செல்வி. சங்கர் சுபாஜனா

பதிவு இலக்கம் : EU/IS/2013/AC/37

சுட்டிலக்கம் : CS 5187



FAC 740

Project Report
Library - EUSL


இவ்வாய்வானது கலைமானி அரசறிவியல் சிறப்புப் பட்டத் தேர்வின் ஒரு பகுதின
பூர்த்தி செய்யும் பொருட்டு கிழக்கு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானங்கள் துறைக்
2019 இல் சமர்ப்பிக்கப்படுகிறது.


சமூக விஞ்ஞானங்கள் துறை,

(அரசறிவியல்)

கிழக்கு பல்கலைக்கழகம்.

இலங்கை.


2019.


PROCESSED
MAIN LIBRARY, EUSL

# ஆய்வுச்சுருக்கம்

இலங்கையின் அதிகாரப் பரவலாக்க பொறிமுறையில் மத்திய அரசாங்கம் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் முதன்மையானவைகளாகும். மத்திய அரசாங்கம் உள்ளூராட்சி அமைச்சகத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள் கட்டளைச்சட்டங்களுக்கு ஊடாக வழங்கப்படாலும் இவைகள் மத்தியரசினால் திரும்பிப் பெற்றுக் கொள்ளக் கூடியவையாகும். உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் பிரதேச அபிவிருத்தி மற்றும் பிரதேச ரீதியான ஜனநாயகத்தை பலப்படுத்தல் ஆகும். இவ் இலக்கினை அடைவதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதிகாரப் பரவலாக்கல் செயற்பாட்டின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் பங்குபற்றவும், அபிவிருத்தி செயற்பாடுகளில் அனைத்து சமூகப் பிரிவினரும் பங்குபற்றவும் அதிகாரப் பரவலாக்கம் உதவுகின்றது. திருக்கோவில் பிரதேச சபை அனைத்து அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தாததுடன் பெரும்பாலான சேவைகள் திருக்கோவில் பிரதேசசபையினால் வழங்கப்படாமலும் உள்ளது. திருக்கோவில் பிரதேசசபைக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற தலைவர்களுக்கும் அங்கு காணப்படுகின்ற நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் பிரதேசசபைக் கட்டளைச் சட்டம் பற்றிய போதிய விழிப்புணர்வின்மை காணப்படுகின்றது. திருக்கோவில் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பிரதேச சபையின் வகிபங்கு காத்திரமானதாகும். கிராமியமட்ட மக்கள் மன்றம் என்றவகையில் மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் அவர்களுக்கு முழுமையாகச் சென்றடைவதற்கு பிரதேசசபை நிர்வாக அதிகாரிகளும் பிரதேச சபை உறுப்பினர்களும் இணைந்து செயற்பட வேண்டும். ஆனால் திருக்கோவில் பிரதேச சபையின் அனுபவம் இதற்கு எதிர்மாறானதாகவுள்ளது. பிரதேசசபை உறுப்பினர்கள் திருக்கோவில் பிரதேசசபை நிர்வாக உத்தியோகத்தர்களுடன் மோதுகின்ற நிலையேயுள்ளது. பிரதேச சபைகளின் பிரதான பணிகளில் ஒன்று மக்களுக்கான பொதுச் சுகாதார சேவைதளை வழங்குவதாகும். தனது எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் சுகாதாரம் தொடர்பில் திருக்கோவில் பிரதேசசபையானது கவனம் செலுத்த வேண்டும். இதற்காக சுகாதார வைத்திய அதிகாரி, சூழல் பாதுகாப்பு திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து செயலாற்ற வேண்டும். பிரதேச சபைகள் தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் முறையான திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பிரதேசத்தின் சுகாதாரத் தன்மையிலும் பிரதேசத்தை அழகுபடுத்துவதிலும் பிரதேச சபைகளின் பங்களிப்பு இன்றியமையாததாகும். திருக்கோவில் பிரதேசசபை பல கிராமங்களை நிர்வகிக்கின்றது. இவ்வகையில் அனைத்து கிராமமக்களின் நலனையும் தேவைகளையும் பூர்த்திசெய்யவேண்டும். திருக்கோவில் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தலானது மந்தநிலையிலேயேயுள்ளது.

## பொருளடக்கம்


உறுதியுரை I

முன்னுரை III

நன்றியுரை IV

ஆய்வுச்சுருக்கம் V

**அத்தியாயம் ஒன்று – ஆய்வு முன்மொழிவு** 1 - 8

1.1 அறிமுகம் 1

1.2 இலக்கிய மீளாய்வு 2 - 3

1.3 ஆய்வு இடைவெளி 3

1.4 ஆய்வுப் பிரச்சினைகள் 3

1.5 ஆய்வு வினாக்கள் 3 - 4

1.6 ஆய்வின் நோக்கங்கள் 4

1.7 ஆய்வின் கருதுகோள் 4

1.8 கோட்பாட்டு விளக்கம் 4 - 6

1.9 ஆய்வு முறையியல் 6

1.10 ஆய்வின் முக்கியத்துவம் 6 -7

1.11 ஆய்வு வரையறை 7

1.12 அத்தியாய ஒழுங்கமைப்பு 7 - 8

**அத்தியாயம் இரண்டு – அதிகாரப்பரவலாக்கம் மற்றும் பொறுப்புக்கூறல்** 9 - 2

2.1 அறிமுகம் 9

2.2 அதிகாரப் பரவலாக்கம் 10

2.3 அதிகாரப்பரவலாக்கத்திற்கான காரணிகள் 11 -

2.4 நிர்வாக மையமயவாக்கலுக்கும் பரவலாக்கலுக்கும் இடையிலான வேறுபாடு 12

2.5 பரவலாக்கலின் நன்மைகள் 13

2.6 அதிகாரப்பவலாக்கலின் வகைகள் 13 - 14

2.7 நவீன அரசுகளில் அதிகாரப் பரவலாக்கல் 14 - 16

2.8 பொறுப்புக்கூறல் 16 - 17

2.9 பொறுப்புக்கூறலின் வகைகள் 18 - 19

2.10 உள்ளூராட்சி நிறுவனங்களில் பொறுப்புக்கூறலின் முக்கியத்துவம் 20 - 21

2.11 முடிவுரை 21 - 22

**அத்தியாயம் மூன்று – திருக்கோவில் பிரதேச சபையும் சேவை வழங்கலும் 23 - 38**

3.1 அறிமுகம் 23

3.2 பிரதேச அறிமுகம் 24

3.3 திருக்கோவில் பிரதேச சபை 25

3.4 திருக்கோவில் பிரதேச சபையின் குறிக்கோள்கள் 26

3.5 திருக்கோவில் பிரதேச சபையின் நிர்வாகக் கட்டமைப்பு 26 - 27

3.6 பிரதேச சபை உறுப்பினர்கள் 27 - 28

3.7 திருக்கோவில் பிரதேசசபையின் அதிகாரங்கள் 28 - 29

3.8 திருக்கோவில் பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகள் 29 - 33

3.9 திருக்கோவில் பிரதேச சபை நிதி மூலங்கள் 33 - 34

3.10 திருக்கோவில் பிரதேச சபையுடன் இணைந்து இயங்கும் நிறுவனங்கள் 34 - 36

3.11 முடிவுரை 36 - 38

**அத்தியாயம் நான்கு –திருக்கோவில் பிரதேசசபை : கள ஆய்வு 39 - 56**

4.1 அறிமுகம் 39

4.2 குடித்தொகைப்பண்பு 39 - 40

4.3 அதிகாரப்போட்டி 40 - 43

4.4 பொதுச் சுகாதாரம் 43 - 45

4.5 திண்மக்கழிவகற்றல் 45 - 47

4.6 உட்கட்டமைப்பு வசதி 47 - 48

4.7 குடிநீர்ப் பற்றாக்குறை 48 - 49

4.8 பிரதேசசபைக் கட்டளைச்சட்டம் 49 - 51

4.9 பெண்களின் பங்குபற்றல் 51 - 53

4.10 பிரதேசசபைக்கும் பொதுமக்களுக்குமிடையிலான உறவு 54

4.11 முடிவுரை 54 - 56

**அத்தியாயம் ஐந்து - ஆய்வின் பெறுபேறு கண்டுபிடிப்பு மற்றும் முடிவு 57 - 66**

5.1 அறிமுகம் 57

5.2 பெறுபேறும் கண்டுபிடிப்பும் 57 - 62

5.3 கருதுகோள்பரிசோதனை 62

5.4 கோட்பாட்டின் பொருத்தம் 62 - 63

5.5 பரிந்துரைகள் 63 - 66

**பின்னிணைப்பு 67 - 68**

**உசாத்துணை 69 - 71**

**வினாக்கொத்து 72 - 78**